கவனிக்க.- *2016.12.16 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* IV *(அ) பிரசுரிக்கப்படவில்லை.*

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1999 - 2016 දෙසැම්බර් මස 23 වැනි සිකුරාදා - 2016.12.23

1999 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)

	பக்கம்		பக்கம்
பதவிகள் - வெற்றிடம்	-	வரவு செலவுக் கூற்றுகள்	-
பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்	-	வரவு செலவுத் திரட்டுகள்	-
உள்ளூராட்சி அறிவித்தல்கள்	3340	ஆதன விற்பனைகள்	-
துணைவிதிகள்	-	ஆயவிற்பனையும் குத்தகையும்	-
உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள்		வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள்	-
கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்	-	நானாவித அறிவித்தல்கள்	3355

கவனிக்க.- (i) *பாலித தெவரப்பெரும மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2016, திசெம்பர் மாதம் 16 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.*

(ii) *தொழில் நுட்பத்தையும் சமூக சேவையையும் உயர்த்துவதற்கான கல்வி நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2016, திசெம்பர் மாதம் 16 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.*

(iii) *பொலன்னறுவை பௌத்த சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2016, திசெம்பர் மாதம் 16 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.*

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** *அதாவது 2017, சனவரி மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2016, திசெம்பர் மாதம் 30 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, சட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, சட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

கங்காணி லியனகே,
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2016 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 15 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

உள்ளூராட்சி அறிவித்தல்கள்

பியகமை பிரதேச சபை

பியகமை பிரதேச சபையினால் 2016, ஒகத்து 05ஆந் திகதியன்று நடைபெற்ற பிரதேச சபை குழு தீர்மான இல. 5028 இன் கீழ், பின்வரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என இத்தால் அறியத்தருகின்றேன்.

ஆர். எச். பீ. வசந்தி விக்ரமரத்ன,
செயலாளர்,
பியகமை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
பியகமை,
2016, நவெம்பர் 30.

தீர்மானம்

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி (குறைநிரப்பு துணைவிதிகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் மேல் மாகாண உள்ளூராட்சி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2014.11.14 ஆந் திகதிய 1888/47 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட சட்டத்தின் துணைவிதிகள், 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய மேல் மாகாண உள்ளூராட்சி சபையினால் அங்கீகரிக்கப்பட்டு 2015.12.28 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் இவ் அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி (குறைநிரப்புத் துணைவிதிகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மேலும் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய அச் சொல்லப்பட்ட துணை விதிகள் பியகமை பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்திற்குள் 2017.01.01 ஆந் திகதியிலிருந்து உரித்தாதல் வேண்டும் என 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 9(3) ஆம் பிரிவின் கீழ் தீர்மானிக்கின்றேன்.

மேலும் தீர்மானம் எடுக்கும் இன்றுமுதல் பியகமை பிரதேச சபை அதிகார பிரதேசத்திற்குள் 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி (குறைநிரப்புத் துணை விதிகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உரித்தாகி பயனுறுகின்ற கீழே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையிலுள்ள பெயர்களின் கீழ் விபரிக்கப்பட்டுள்ள குறைநிரப்புத் துணை விதிகள், அக் குறைநிரப்புத் துணை விதிகளின் கீழ் அதுவரை நடைமுறையிலிருந்து செயன்முறைகள் வலு வற்றதாகும் விதத்தில் 2016.12.31 ஆந் திகதிக்குப் பின்னர் பியகமை பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்துக்கு உரித்தாகாது எனவும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 9(3) ஆம் பரிவின் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் இத்தால் தீர்மானிக்கின்றேன்.

அட்டவணை

துணை விதியின் இலக்கம்	துணைவிதிகள்
11	தங்கும் விடுதிகள் பற்றிய துணை விதி
14	ஹோட்டல்கள் பற்றிய துணை விதி
16	வெதுப்பகங்கள் பற்றிய துணை விதி
19	மீன் விற்பனை பற்றிய துணை விதி
20	இறைச்சி விற்பனை பற்றிய துணை விதி
21	விரும்பத் தகாத மற்றும் ஆபத்தான வியாபாரங்கள் பற்றிய துணை விதி
28	உல்லாச வியாபாரிகள் பற்றிய துணை விதி
39	விளம்பர அறிவித்தல்கள் பற்றிய துணை விதி

பியகமை பிரதேச சபை

பியகமை பிரதேச சபையினால் 2016, நவெம்பர் 07 ஆந் திகதியன்று நடைபெற்ற பிரதேச சபை குழு தீர்மான இல. 6210 இன் கீழ், பின்வரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என இத்தால் அறியத்தருகின்றேன்.

ஆர். எச்.பீ. வசந்தி விக்ரமரத்ன,
செயலாளர்,
பியகமை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
பியகமை,
2016, நவெம்பர் 30.

தீர்மானம்

பியகமை பிரதேச சபையின் தத்துவத்தை செயற்படுத்துகின்ற பணிகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றுகின்ற பியகமை பிரதேச சபையின் செயலாளர் , ஆர்.எச்.பீ வசந்தி விக்ரமரத்ன ஆகிய நான், 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 9(3)ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 134(1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் பியகமை பிரதேச சபையின் அதிகார பிரதேசத்திற்கான 2017 ஆம் ஆண்டிற்குரிய வரிமதிப்பு வரி விதித்தல் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு இருத்தல் வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றேன். அதாவது,

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின 14 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவினால் பிரதேச சபைக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், பிரதேசத்திற்குள் எல்லா இல்லங்கள்,கட்டிடங்கள், காணிகள், வீடுகள் ஆகியவற்றிற்கு 2016ஆம் ஆண்டிற்கான ஆண்டு வரிமதிப்பு/உரித்து வரியை 2017 ஆம் ஆண்டிற்கான வரிமதிப்பு/உரித்து வரியாக 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 9(3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 134 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், அச்சொல்லப்பட்ட ஆதனங்கள் மீது மேற்சொல்லப்பட்ட வரிமதிப்பை பின்வருமாறு ஆண்டுப் பெறுமதியின் சதவீதத்தை வரிமதிப்பு வரியாக விதித்தல் வேண்டும் எனவும்,

(அ) கிரிபத்கொடை சப்புகஸ்கந்தை, பெரு வீதியில் தெம்பிலிகஸ் முல்லை பெருஞ்சந்தியிலிருந்து சப்புகஸ்கந்தை எண்ணெய் சுத்திகரிப்பு சந்திவரையுள்ள பிரதேசங்களில் அச்சொல்லப்பட்ட பெருவீதியின் மத்தியில் நேர்கோட்டிலிருந்து எப்பாகத்தினாலும் 300 அடிக்கு உட்பட்டு அமைந்துள்ள வயல் அல்லாத அசையா சொத்துக்களின் வருடாந்த பெறுதியின் 7% வரிமதிப்பு வரியாகவும்,

(ஆ) 265 பமுனுவில 265/ஏ கல் ஏதண்ட , 270 மாக்கொலை வடக்கு(மேல்) , 270/ஏ மாக்கொலை வடக்கு (மத்திய) , 270 /பி மாக்கொலை வடக்கு (கீழ்), 271 மாக்கொலை தெற்கு(மேல்) , 271/ஏ சப்புகஸ்கந்தை , 271 /பி மாக்கொல தெற்கு(கீழ்) , 275 ஹெய்யந்துடுவை (வடக்கு) , 275 /ஏ ஹெய்யந்துடுவை (தெற்கு), 275/பி ஹெய்யந்துடுவை (கிழக்கு), 275 /சீ ஹெய்யந்துடுவை(மேற்கு), 277 கோனவலை (கிழக்கு) , 277/ஏ கோனவலை (மேற்கு) , 277/பி கோனவலை (மத்தி), ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் (மேற்குறிப்பிடப்பட்டுள்ள (அ) விபரிக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் அமைந்துள்ள ஆதனங்கள் தவிர்த்து) உள்ள வயல் அல்லாத அசையா சொத்துக்களின் வருடாந்த பெறுமதியின் 5% வரிமதிப்பு வரியாகவும்,

(இ) மல்வானை தண்ணீர் பிரேரணை முறைமையின் மூலம் தண்ணீர் வழங்கும் பிரதேசங்களில் அமைந்துள்ள வயல் அல்லாத அசையாச் சொத்துக்களிள் வருடாந்த பெமதியின் 7% வரிமதிப்பு வரியாகவும்,

(ஈ) இல. 19, பியகமை தேர்தல் பிரிவிலுள்ள இல. 268 இன் கீழ் பியன்விலை (கிழக்கு) , 268/ஏ கீழ் பியன்விலை (மேற்கு), 268 /பி கீழ், பியன்விலை (மத்தி),269 /பி கீழ் பியன்விலை (வடக்கு), 269/ஏ மாவரமண்டிய, 269/பி கீழ் பியன்விலை (மத்தி) கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள கொழும்பு - கண்டி வீதி மத்திய நேர்கோட்டிலிருந்து 300 அடிக்குள் அமைந்துள்ள வயல் அல்லாத அசையா சொத்துக்களின் பெறுமதியின் 7% வரிமதிப்பு வரியையும் அச்சொல்லப்பட்ட கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள எஞ்சிய வயல் அல்லாத அசையா சொத்துக்களின் வருடாந்தப் பெறுமதியின் 5% வரிமதிப்பு வரியாகவும்,

(உ) மாவரமண்டிய உடுபிலை பெருவீதியில் சியம்பலப்பே பிரிவுடன் தொடர்புள்ள இடத்திலிருன்து அச்சொல்லப்பட்ட வீதியில் பியகமை தேர்தல் பிரிவில் வடக்கு எல்லையுடன் தொடர்புடைய இடங்கள் வரை மாவரமண்டிய உடுபிலை பெருவீதியின் மத்திய நேர்கோட்டிலிருந்து 300 அடிக்குள் அமைந்துள்ள வயல் அல்லாத அசையா சொத்துக்களின் வருடாந்த பெறுமதியில் 5% வரிமதிப்பு வரியாகவும்,

(ஊ) சமுர்த்தி மாவத்தையில் கிராம அலுசலர் பிரிவிற்கு இடத்திலிருந்து அச்சொல்லப்பட்ட வீதியில் யட்டிஹேன - தெக்கடன வீதியுடன் தொடர்புடைய இடங்கள் வரை சமுர்த்தி மாவத்தையின் மத்திய நேர்கோட்டிலிருந்து 300 அடிக்குள் அமைந்துள்ள வயல் அல்லாத அசையா சொத்துக்களின் வருடாந்த பெறுமதியின் 5% வரிமதிப்பு வரியாகவும்,

(எ) களனி- முதுன்கொடை பெருவீதியில் இல. 279 பட்டிவிலை(வடக்கு 279/ஏ பட்டிவிலை (தெற்கு) கிராம அலுவலர் பிரிவில் கிழக்கு எல்லையுடன் தொடர்புடைய இடங்களிலிருந்து அச்சொல்லப்பட்ட வீதியில் பியகமை தேர்தல் பரிவில் வடக்கு எல்லையுடன் தொடர்புடைய இடங்கள் வரை களனி- முதுன்கொடை பெருவீதியில் மத்திய நேர்கோட்டிலிருந்து எப்பாகத்தினாலும் 300 அடிக்குள் அமைந்துள்ள வயல் அல்லாத அசையா சொத்துக்களின் வருடாந்தப் பெறுமதியின் 5% வரிமதிப்பு வரியாகவும்,

(ஏ) தெல்கொடை - தொம்பை பெருவீதியில் களனி- முதுன்கொடை பெருவீதியில் தெல்கொடை பெருஞ்சந்தியினுடன் தொடர்புடைய இடங்களிலிருந்து அச்சொல்லப்பட்ட வீதியில் வல்கமை உலஹிட்டிவலை பெருவீதியுடன் தொடர்புடைய இடங்கள் வரை தெல்கொடை தொம்பை பெருவீதியில் மத்திய நேர்கோட்டிலிருந்து எப்பாகத்தினாலும் 300 அடியிற்குள் அமைந்துள்ள வயல் அல்லாத அசையா சொத்துக்களின் வருடாந்தப் பெறுமதியின் 5% வரிமதிப்பு வரியாகவும்,

(ஐ) கோனஹேனை - மீகஹவத்தை பெருவீதியில் மாகீகொலை உடுபிலை பெருவீதியுடன் தொடர்புடைய இடங்களிலிருந்து அச்சொல்லப்பட்ட வீதியில் பியகமை தேர்தல் பிரிவின் வடக்கு எல்லை மற்றும் இல. 286 கோனஹேன கிராம அலுவலர் பிரிவுடன் தொடர்புடைய தெற்கு எல்லை வரையான இடங்கள் வரை கோனஹேன மீகஹவத்தை பெருவீதியில் மத்திய நேர்கோட்டிலிருந்து எப்பாகத்தினாலும் 300 அடிக்குள் அமைந்துள்ள வயல் அல்லாத அசையா சொத்துக்களின் வருடாந்தப் பெறுமதியின் 5% வரிமதிப்பு வரியாகவும்,

(ஒ) பியகமை- மல்வானை பெருவீதியில் களனி- முதுன்கொடை பெருவீதியுடன் தொடர்புடைய இடங்களிலிருந்து அச் சொல்லப்பட்ட வீதியில் (இ) என விவரிக்கப்பட்டுள்ள மேற்கு எல்லையுடன் தொடர்புபட்ட இடங்கள் வரை பியகமை - மல்வானை பெருவீதியில் மத்திய பெருவீதியில் மத்திய நேர்கோட்டிலிருந்து எப்பாகத்தினாலும் 300 அடிக்குள் அமைந்துள்ள வயல் அல்லாத அசையா சொத்துக்களின் வருடாந்தப் பெறுமதியின் 5% வரிமதிப்பு வரியாகவும்,

(ஓ) யட்டிஹேனை - தெக்கட்டனை பெருவீதியில் களனி- முதுன்கொடை பெருவீதியுடன் தொடர்புடைய இடங்களிலிருந்து அச் சொல்லப்பட்ட வீதியில் (இ) என விவரிக்கப்பட்டுள்ள மேற்கு எல்லையுடன் தொடர்புபட்ட இடங்கள்வரை யட்டிஹேனை - தெக்கட்டனை பெருவீதியில் மத்திய நேர்கோட்டிலிருந்து எப்பாகத்தினாலும் 300 அடிக்குள் அமைந்துள்ள வயல் அல்லாத அசையா சொத்துக்களின் வருடாந்தப் பெறுமதியின் 5% வரிமதிப்பு வரியாகவும்,

(ஔ) மாபிமை- மாக்கொலை பெருவீதியில் களனி -முதுன்கொடை பெருவீதியுடன் தொடர்புடைய இடங்களிலிருந்து அச் சொல்லப்பட்ட வீதியில் ஹெய்யன்துடுவை (கிழக்கு) கிராம அலுவலர் பிரிவின் மேற்கு எல்லையுடன் தொடர்புபட்ட இடங்கள் வரை மாபிமை- மாக்கொலை பெருவீதியில் மத்திய நேர்கோட்டிலிருந்து எப்பாகத்தினாலும் 300 அடிக்குள் அமைந்துள்ள வயல் அல்லாத அசையா சொத்துக்களின் வருடாந்தப் பெறுமதியின் 5% வரிமதிப்பு வரியாகவும்,

(க) மாபிமை- கோனவலை பெருவீதியில் மாபிமை- மாக்கொலை பெருவீதியுடன் தொடர்புடைய இடங்களிலிருந்து அச்சொல்லப்பட்ட வீதியில் களனி- முதுன்கொடையுடன் தொடர்புடைய இடங்கள் வரை மாபிமை- மாக்கொலை பெருவீதியில் மத்திய நேர்கோட்டிலிருந்து எப்பாகத்தினாலும் 300 அடிக்குள் அமைந்துள்ள வயல் அல்லாத அசையா சொத்துக்களின் வருடாந்தப் பெறுமதியின் 5% வரிமதிப்பு வரியாகவும்,

(ங) இல.19, பியகமை தேர்தல் பிரிவினுள் இல. 279 இன் கீழ் பட்டிவிலை (வடக்கு) 279/ஏ, பட்டிவிலை (தெற்கு) 278 தல்வத்தை , 278 /ஏ பொல்லேகலை ஆகிய கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள வயல் அல்லாத அசையா சொத்துக்களின் பெறுமதியில் 5% வரிமதிப்பு வரியாகவும்,

மேலும் 2017 ஆம் ஆண்டிற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வோர் காலாண்டிற்காகவும் அதற்கு நேரெதிரே குறிப்பிடப்பட்டுள்ள முன்னர் நியமிக்கப்பட்டுள்ள ஆண்டு வரிமதிப்பு வரியை பியகமை பிரதேச சபை நிதியத்திற்கு செலுத்துதல் வேண்டும் எனவும் அவ்வாறு ஆண்டு வரிமதிப்பு வரி 2017 ஆம் ஆண்டு சனசரி மாதம் 31 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் செலத்தப்படுமாயின் ஆண்டு வரிமதிப்பு வரி தொகையில் 10% கழிவும் இச்சொல்லப்பட்ட அட்டவணையில் ஒவ்வோர் காலாண்டிற்கும் முன்னர் குறிப்பிடப்பட்டுள்ள திகதியிற்கு முன்னர் உரிய வரிமதிப்பு வரி பியகமை பிரதேச சபை நிதியத்திற்கு செலுத்தப்படுமாயின் அக்காலண்டிற்கு உரிய தொகையின் 5% கழிவும் பியகமை பிரதேச சபையினால் தரப்படும் எனவும் இத்தால் தீர்மானிக்கின்றேன்.

அட்டவணை

காலாண்டு	செலுத்தப்பட வேண்டிய திகதி	5% கழிவைப் பெறும் இறுதி திகதி
முதலாம் காலாண்டு	சனவரி 1 முதல் மார்சு 31 வரை	2017.01.31
இரண்டாம் காலாண்டு	ஏப்பிறல் 1 முதல் யூன் 30 வரை	2017.04.30
மூன்றாம் காலாண்டு	யூலை 1 முதல் செத்தெம்பர் 30 வரை	2017.07.31
நான்காம் காலாண்டு	ஒற்றோபர் 1 முதல் திசெம்பர் 31 வரை	2017.10.31

12-739/2

மாத்தறை மாநகர சபை

2017 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுப் பேரேடு

2017 ஆம் ஆண்டுக்கான திட்டமிடப்பட்ட கருத்திட்டங்களில் வரவு செலவுத் திட்ட பேரேடு 2016.12.10 ஆந் திகதியிலிருந்து ஏழு (07) நாட்களுக்கு பொது மக்கள் பரிசீலனைக்காக மாத்தறை மாநகர சபை அலுவலகத்தில் வெளிப்படையாக வைக்கப்பட்டிருக்கும் என்பதை மாநகர சபை கட்டளைச் சடடத்தின் 214(2) ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறியத்தருகின்றேன்.

சேனக்க பல்லியகுருகே,
மாநகர ஆணையாளர்,
மாநகரசபை - மாத்தறை.

மாநகர சபை அலுவலகம்,
மாத்தறை,
2016, திசெம்பர் 16.

12-790

பாத்ததும்பர பிரதேச சபை

மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சி விற்பனைக் கடைகளை நடத்துவதற்கான அனுமதிப்பத்திரம் வழங்குதல் - 2017

ஊன் வினைஞர் கட்டளைச் சட்டத்தின் (272 ஆம் அத்தியாயத்தின்) 7 (2) ஆம் பிரிவின்படி பின்வரும் அட்டவணையில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் மாட்டிறைச்சி மற்றும் ஆட்டிறைச்சி விற்பனை நிலையங்களை நடத்துவதற்கு 2017 ஆம் வருடத்திற்கான அனுமதிப்பத்திரம் வழங்குமாறு விண்ணப்பித்துள்ளனர் என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

பாத்ததும்பர பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் வதியும் எவரேனும் இதற்கான எதிர்ப்பைக் காட்ட விரும்பினால், அதன் காரணத்தைக் குறிப்பிட்டு இணைப் பிரதிகளில் இந்த அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 14 (பதினான்கு) நாட்களுக்குள் அதனைப் பதிவுத் தபாலில் எனக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டுமென இத்தால் அறிவித்துக்கொள்கிறேன்.

இந்தக் கால எல்லைக்குள் இவ் அறிவித்தல் பற்றிய எதிர்ப்புக்கள் முன்வைக்கப்படவில்லையெனின், கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளோருக்கு குறித்த வர்த்தக நிலையங்களில் உரிய வர்த்தகத்தைச் செய்துகொண்டு செல்ல 2017.01.01 முதல் 2017.12.31 ஆந் திகதி வரை அனுமதிப்பத்திரம் வழங்கப்படுமென பொதுமக்கள் தெரிவித்துக்கொள்வதற்காக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

எஸ்.எஸ். ஹெலபிட,
செயலாளர்,
பாத்ததும்பர பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
பாத்ததும்பர,
2016, நவெம்பர் 29.

அட்டவணை

விண்ணப்பதாரியின் பெயர்	வர்த்தகம் செய்யும் இடம்	வர்த்தகத்தின் தன்மை
1. திரு. கே. எம். தையுப்	40/ஏ, ஊராதெனிய, குண்ணேபான	மாட்டிறைச்சிக்கடை
2. திரு. எஸ். எம். ராசிக்	342, தொரகமுவ வீதி, உடதலவின்ன	மாட்டிறைச்சிக்கடை
3. திரு. எஸ். எம். இல்லியாஸ்	357, தொரகமுவ வீதி, உடதலவின்ன	மாட்டிறைச்சிக்கடை
4. திரு. ஏ. ஏ. எம். மசாஹிம்	7/டீ/1, பொல்கொல்லை	மாட்டிறைச்சிக்கடை
5. திரு. எம். எம். ரிபான்	437, தொரகமுவ வீதி, கலதெனிய சந்தி	மாட்டிறைச்சிக்கடை
6. திரு. ஐ. எம். யெஹிசான்	13/சீ, கட்டுகஸ்தொட்ட வீதி, மடவளை	ஆட்டிறைச்சிக்கடை

12-826/2

பாத்ததும்பர பிரதேச சபை

ஊன்வினைஞர் கட்டளைச் சட்டம் (272 ஆம் அத்தியாயம்)

ஊன் வினைஞர் கட்டளைச் சட்டத்தின் (272 ஆம் அத்தியாயத்தின்) 7 (2) ஆம் பிரிவின்படி பின்வரும் அட்டவணையில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் மாடு அறுக்குமிடம் மற்றும் ஆடு அறுக்குமிடம் என்பவற்றை 2017 ஆம் ஆண்டில் பின்வரும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள முகவரியில் நடத்திச் செல்ல அனுமதிப்பத்திரம் வழங்குமாறு விண்ணப்பித்துள்ளனர். பாத்ததும்பர பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் வதியும் எவரேனும் இதற்கான எதிர்ப்பைக் காட்ட விரும்பினால், அதன் காரணத்தைக் குறிப்பிட்டு எழுத்து மூலம் இணைப் பிரதிகளில் இந்த அறிவித்தல் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் IV (ஆ) பகுதியில் வெளியிடப்பட்ட 14 நாட்களுக்குள் அதனைப் பதிவுத் தபாலில் எனக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டுமென இத்தால் அறிவித்துக்கொள்கின்றேன்.

எஸ்.எஸ். ஹெலபிட,
செயலாளர்,
பாத்ததும்பர பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
பாத்ததும்பர,
2016, நவெம்பர் 29.

அட்டவணை

விண்ணப்பதாரியின் பெயர்	தன்மை	மாடு அறுக்குமிடம் மற்றும் ஆடு அறுக்குமிடத்தின் முகவரி
1. திரு. ஐ. எம். யெஹிசான் 15/6, கண்டி வீதி, மடவளை பஸார்	மாடு அறுக்குமிடம்	11/6, கண்டி வீதி, மடவளை
2. திரு. ஐ. எம். யெஹிசான் 15/6, கண்டி வீதி, மடவளை பஸார்	மாடு அறுக்குமிடம்	6/15, கண்டி வீதி, மடவளை

12-826/1

அரநாயக்க பிரதேச சபை

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 14 ஆம் மற்றும் 24 (2) ஆம் உறுப்புரைகளுக்குக் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 24 ஆவது உறுப்புரைக்கு அமைய சப்பிரகமுவ மாகாணத்தில் கேகாலை மாவட்டத்தின் அரநாயக பிரதேச சபையினால் இங்கு இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பாதைகள் /வீதிகள் அரநாயக பிரதேச சபைக்குச் சொந்தமான பாதைகள் /வீதிகள் என இத்துடன் பிரகடனப்படுத்தப்பட்டு அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.

தற்போது பிரதேச சபையினால் அளக்கப்பட்டு அடையாளமிடப்பட்டுள்ள இப்பாதைகள் தொடர்பாக குறிப்பிட்ட காணி உரிமையாளர்களால் யாதாயினும் எதிர்ப்புக்கள் தெரிவிப்பதாயின் இவ்வறிவித்தல் விடுக்கப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாத காலத்திற்குள் தமது உரிமையை நிரூபிப்பதற்கு 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 24 (2) ஆம் உறுப்புரைக்கு அமைய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இத்துடன் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.

இக்கால எல்லைக்குள் யாதேனுமோர் எதிர்ப்பு முன்வைக்கப்படாவிடின் அட்டவணையில் குறிப்பிடப்படும் பாதைகள்/வீதிகள் அரநாயக்க பிரதேச சபைக்குச் சொந்தமான பாதைகள் /வீதிகள் ஏற்றுக்கொண்டு நிர்வகிக்கப்படும் எனவும், பொதுமக்கள் அறிந்து கொள்வதற்காக இத்துடன் பகிரங்க அறிவித்தல் விடுக்கின்றேன்.

டீ.எம். சந்ராவதி,
செயலாளர்,
அரநாயக பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
அரநாயக,
2016, திசெம்பர் 05.

அட்டவணை

பாதையின் பெயர்	:	எகொடவத்தை கங்கொடெல்ல குறுந்தூரப் பாதை
பாதையின் ஆரம்பமும் முடிவும்	:	தம்மிட்ட பஹல கும்புர பாலத்தின் அருகிலிருந்து ருக்கெத்தன காணி வரையான பாதை
கிராம அதிகாரிப் பிரிவும் இலக்கமும்	:	17-D- கம்மன்னாகொடை
பாதையின் நீளம்	:	62.50 மீற்றர்
பாதையின் அகலம்	:	8 அடி

பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் இடப்பக்கமாகவுள்ள காணி, காணி உரிமையாளர்களின் பெயர்கள் :

1. திரு. ஏ.ஆர். குணதிலக்க உடருக் அத்தன வத்த காணி

பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் வலப்பக்கமாகவுள்ள காணி, காணி உரிமையாளர்களின் பெயர்கள் :

1. திரு. ஏ.கே. செனெவிரத்ன பெல்பொல்வத்த காணி
2. திருமதி எச்.ஜீ.சுமனாவதி பெல்பொல்வத்த காணி
3. திரு. டப்.ஏ. நிஷாந்த பிரதீப் குமார உடருக் அத்தன வத்த காணி

එච්.එම්.ආර්.ටී.කේ.හේරත්,
බලයලත් මිනින්දෝරු තලමිතිකරු,
උසාවි කොමසාරිස් සහ තක්සේරුකරු,
පින්නවල, රඹුක්කන.
ලියාපදිංචි අංකය: 19831492

පිඹුරු අංකය: 187/2016

එගොඩවත්ත ගංගොඩැල්ල කෙටි මාර්ගය

යොමුව :- අරණායක ප්‍රාදේශීය සභා සභාපතිගේ අංක අර/ප්‍රාස/07/මාර්ග මැනුම් හා 2006.10.04 දින ලිපිය

පරිමාණය 1:1000



විස්තරය
ඉ - ඉවුර
පැවැ - පැළෙනි වැට
මාර්ග(ප්‍රාස) - මාර්ගය(ප්‍රාදේශීය සභා)

සබරගමුව පළාතේ
කෑගල්ල දිස්ත්‍රික්කයේ

හල්බොඩ කෝරළේ එගොඩපොත සහ තනිප්පේරු පත්තුවේ
තම්මිට ගමේ පිහිටි පැලපොල්වත්ත සහ උඩරුක්අත්තනවත්ත
යන ඉඩම් හරහා පවතින මාර්ගය මැන සාදන ලද

-පිඹුර-

කැබලි අංකය	මාර්ගයේ වර්ග ප්‍රමාණය				දිග(මීටර්)	පළල(අඩි)	නිවැරදි කරුණු
	හෙක්ටයාර්	අ	රූ	පර			
1	0.0187	00	0	07.38	62.50	08	———

මායිම් පෙන්වා දුන් අය
මායිම් බලා ගත් අය
} ඉඩම් හිමිකරුවන්

2016-07-17

එච්.එම්.ආර්.ටී.කේ. හේරත්
බලයලත් මිනින්දෝරු තලමිතිකරු
උසාවි කොමසාරිස් සහ තක්සේරුකරු
ටෙලි : 035-2266422/077 4973610
ලි.ප. අංකය: 19831492

මනින ලද්දේ : 2016.07.17 වන දින

குளியாப்பிட்டிய பிரதேச சபை

1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி சபை ஏற்றுக்கொள்ளப்பட்ட துணைவிதிச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் செய்யப்படும் அறிவித்தல்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 9 (3) ஆம் பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி சபை ஏற்றுக்கொள்ளப்பட்ட துணைவிதிச் சட்டத்திக் 3 ஆம் பிரிவின் கீழ் , கீழே குறிப்பிட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய 2015 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி 735 ஆம் இலக்கத்தின் கீழ், கீழே குறிப்பிடப்பட்டுள்ள தீர்மானம் எடுப்பதற்கு ஏற்பட்டது பற்றி இத்துடன் அறிவித்தல் விடுக்கின்றேன்.

தீர்மானம்

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாணசபை (இடைநிலைச் சட்டத்தின்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி சபை (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணை விதி) சட்டத்தில் 2 ஆம் பிரிவின் கீழ் வடமேல் மாகாணத்தில் உள்ளூராட்சி மன்ற விடயப் பொறுப்புடைய அமைச்சரினால் ஒழுங்கமைக்கப்பட்டு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் 1933/40 ஆம் இலக்க மற்றும் 2015.09.25 ஆந் திகதியுடைய அதிவிசேட வர்த்தமானியில் IV(அ) பகுதியில் பிரசுரிக்கப்பட்ட ஆரம்ப துணை விதி வரைவினை 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்கத்திற்கான உள்ளூராட்சி சபை (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணை விதி) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மேலும் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய உரிய பிரதேச சபை திண்மக்கழிவுப் பொருள் முகாமைத்துவம் பற்றிய துணை விதியினை குளியாப்பிட்டிய பிரதேச சபை அதிகாரப் பிரிவிற்காக 2017.01.01 ஆந் திகதி தொடக்கம் அதிகாரப்படுத்தப்பட வேண்டும் என்று 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கத்திற்கான பிரதேச சபை சட்டத்தின் 9 (3) ஆம் உப பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி இத்துடன் தீர்மானிக்கின்றேன்.

ஜே.ஏ.எஸ். ஜயசிங்ஹ,
செயலாளர் மற்றும் செயல்கள்,
கடமைகளை நிறைவேற்றுகின்ற உத்தியோகத்தர்,
குளியாப்பிட்டிய பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
குளியாப்பிட்டிய.
2016, நவெம்பர் 30 .

12-894/1

குளியாப்பிட்டிய பிரதேச சபை

1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி சபை ஏற்றுக்கொள்ளப்பட்ட துணைவிதிச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் செய்யப்படும் அறிவித்தல்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 9 (3) ஆம் பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி சபை ஏற்றுக்கொள்ளப்பட்ட துணைவிதிச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் , கீழே குறிப்பிட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய 2016 ஆம் ஆண்டு மார்சு மாதம் 11 ஆந் திகதி 1371ஆம் இலக்கத்தின் கீழ், கீழே குறிப்பிடப்பட்டுள்ள தீர்மானம் எடுப்பதற்கு ஏற்பட்டது பற்றி இத்துடன் அறிவித்தல் விடுக்கின்றேன்.

தீர்மானம்

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாணசபை (இடைநிலைச் சட்டத்தின்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி சபை (ஏற்றுக்கொள்ளப்பட்டதுணை விதி) சட்டத்தில் 2 ஆம் பிரிவின் கீழ் வடமேல் மாகாணத்தில் உள்ளூராட்சி மன்ற விடயப் பொறுப்புடைய அமைச்சரினால் ஒழுங்கமைக்கப்பட்டு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் 1930/6 ஆம் இலக்க மற்றும் 2015.08.31 ஆந் திகதியுடைய அதிவிசேட வர்த்தமானியில் IV(அ) பகுதியில் பிரசுரிக்கப்பட்ட ஆரம்ப துணை விதி வரைவினை 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி சபை (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணை விதி) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மேலும் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய உரிய அட்டவணையில் உள்ள துணைவிதியினை குளியாப்பிட்டிய பிரதேச சபை அதிகாரப் பிரிவிற்காக 2017.01.01 ஆந் திகதி தொடக்கம் அதிகாரப்படுத்தப்பட வேண்டும் என்று

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கத்திற்கான பிரதேச சபை சட்டத்தின் 9(3) ஆம் உப பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி இத்துடன் தீர்மானிக்கின்றேன்.

ஜே.ஏ.எஸ். ஜயசிங்ஹ,
செயலாளர் மற்றும் செயல்கள்,
கடமைகளை நிறைவேற்றுகின்ற உத்தியோகத்தர்,
குளியாப்பிட்டிய பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
குளியாப்பிட்டிய.
2016, நவெம்பர் 30 .

அட்டவணை

1. பிரதேச சபைகளில் பொது சபைகளை ஏற்படுத்தல், கூட்டம் நடாத்துதல் பற்றிய துணை விதி
2. பருவகால அறிக்கையினையும் தகவல்களையும் சமர்ப்பித்தல் பற்றிய துணை விதி
3. மரணச்சடங்கு சேவைகளை வழங்கும் நிலையங்களில் நடவடிக்கைகளை நிருவகித்தல் , முறைப்படுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டணம் அறவிடல் பற்றிய துணை விதி

12-894/2

குளியாப்பிட்டிய பிரதேச சபை

பருவகால அறிக்கை வழங்குமாறு விதிக்கப்படுகின்ற அறிவித்தல்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 139 ஆம் பிரிவினால் பிரதேச சபைகளுக்கு கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரப்படி, குளியாப்பிட்டிய பிரதேச சபை அதிகாரப் பிரிவினுள் வரிப்பணம் நடவடிக்கைகளுக்காக வீட்டின், கட்டிடத்தின், காணியின் அல்லது வீட்டுத் தோட்டத்தின் ஆண்டுப் பெறுமதியினை மதிப்பீடு செய்யும் பணிக்காக மற்றும் அல்லது ஏக்கர் வரிப் பணிக்காக ஏதாவதொரு விவசாயத்தினைமேற்கொண்டுள்ள காணியின் அளவினை மதிப்பீடு செய்வதற்காக உரிய ஏதாவதொரு சொத்தின் உரிமையாளருக்கு மற்றும் குடியிருப்பாளருக்கு அதன் வாடகையினை அல்லது ஆண்டுப் பெறுமதியினையோ அதன் அளவு பற்றி பருவகால அறிக்கையினை வழங்குமாறு கட்டளையிடலாம் என்று உரிய சட்டத்தின் 9 ஆம் பிரிவின் 9 (3) ஆம் உப பிரிவினால் உரிய பிரதேச சபை செயலாளர் என்ற வகையில் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி இத்துடன் தீர்மானிக்கின்றேன்.

ஜே.ஏ.எஸ். ஜயசிங்ஹ,
செயலாளர் மற்றும் செயல்கள்,
கடமைகளை நிறைவேற்றுகின்ற உத்தியோகத்தர்,
குளியாப்பிட்டிய பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
குளியாப்பிட்டிய.
2016, நவெம்பர் 30 .

12-894/3

அக்குறணை பிரதேச சபை

1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி சபை ஏற்றுக்கொள்ளப்பட்ட துணைவிதிகள் சட்டம்

(261 ஆம் அதிகாரத்தின்)1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி அமையங்கள் (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணைவிதிகள்) சட்டத்தின் 3 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி மற்றும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 9(3) ஆவது உப பிரிவின் கீழ் பின்வரும் தீர்மானம் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ரீ.எஸ்.ராஜபக்ஸ,
செயலாளர் ,
அக்குறணை பிரதேச சபை,
அலவத்துகொட.

அக்குறணை பிரதேச சபை அலுவலகம்,
அலவத்துக்கொட.
2016,ஒகத்து 16.

தீர்மானம்

இந்தத் தீர்மானத்தை மேற்கொள்ளும் தினம் வரை அக்குறணை பிரதேச சபை நிருவாக எல்லைகளுக்கென 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி அமையங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட துணைவிதிகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் செயலாக்கப்பட்டு வந்த

பின்வரும் அட்டவணையில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்றுக்கொள்ளப்பட்ட துணை விதிகளை குறித்த துணை விதிகளின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வந்த செயன்முறைகளுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் 2017.01.01 ஆம் திகதி முதல் செயலிழக்கச் செய்கின்றேன். இதற்கமைய 2016.12.31 ஆம் திகதியின் பின்னர் அக்குறணை பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் குறித்த அட்டவணையில் தரப்பட்டுள்ள துணை விதிகள் செயற்படமாட்டாது.

அட்டவணை

1. வாடகை வாகனங்களை நிறுத்தி வைப்பது தொடர்பான துணை விதிகள்
2. திரிந்து சென்று வியாபாரம் செய்வது பற்றிய துணை விதிகள்

12-947/1

அக்குறணை பிரதேச சபை

1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி சபை ஏற்றுக்கொள்ளப்பட்ட துணைவிதிகள் சட்டம்

(261 ஆம் அதிகாரத்தின்)1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி அமையங்கள் (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணைவிதிகள்) சட்டத்தின் 3 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி மற்றும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 9(3) ஆவது உப பிரிவின் கீழ் பின்வரும் தீர்மானம் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ரீ.எஸ்.ராஜபக்ஸ,
செயலாளர் ,
அக்குறணை பிரதேச சபை.

அக்குறணை பிரதேச சபை அலுவலகம்,
அலவத்துக்கொட,
2016, ஒகத்து 16.

தீர்மானம்

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 02 ஆம் பிரிவின் (1) ஆவது உப பிரிவின் (அ) பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய (261 ஆவது அதிகாரம்) 1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க (அங்கீகாரம் பெற்ற துணை விதிகள்) உள்ளூராட்சி மன்றங்கள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் மத்திய மாகாண சபையின் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சரால் தயாரிக்கப்பட்டு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1995/7 ஆம் இலக்கத்தையும் 2016.02.23 ஆம் திகதியையும் கொண்ட பிரிவு IV (அ) வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின்வரும் அட்டவணையல் குறிப்பிடப்பட்டுள்ள துணை விதிகள் 2017.01.01 ஆம் திகதி முதல் அக்குறணை பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் செயற்பாட்டுக்கு வரும் என்பதை 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 09(3) ஆம் உப பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமையத் தீர்மானித்துள்ளேன்.

அட்டவணை

1. முச்சக்கர வண்டிகளை நிறுத்தி வைப்பது தொடர்பான துணை விதிகள்
2. பொது நூலகங்கள் பற்றிய துணை விதிகள்
3. பிரதேச சபையின் சந்தைகள் தொடர்பான துணை விதிகள்
4. மாடு அறுவையிடங்கள் பற்றிய துணை விதிகள்
5. அலங்கரிப்புக்களை முறைப்படுத்துவது மற்றும் கட்டுப்படுத்துவது பற்றிய துணை விதிகள்
6. இறைச்சி விற்பனை செய்வது பற்றிய துணை விதிகள்
7. தனியார் கற்றல் நிலையங்கள் பற்றிய துணை விதிகள்
8. பொது மலகூடங்களைப் பயன்படுத்துவது மற்றும் கட்டுப்படுத்துவது பற்றிய துணை விதிகள்
9. மீன் விற்பனை தொடர்பான துணை விதிகள்
10. விளம்பர அறிவித்தல்கள் பற்றிய துணை விதிகள்
11. சேவைகளுக்கான கட்டணங்களை அறவிடுவது பற்றிய துணை விதிகள்
12. வரி அறவிடுவதற்கான தவணை அறிக்கைகள் மற்றும் தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் துணை விதிகள்
13. விலங்குப் பண்ணைகளைக் கட்டுப்படுத்துவது மற்றும் முறைப்படுத்துவது பற்றிய துணை விதிகள்
14. அருவருப்பான, அபாயகரமான மற்றும் அருவருப்பான அபாயகரமான வர்த்தகங்கள் பற்றிய துணை விதிகள்
15. பிரதேசசபைகளின் பாதைகளில் செலுத்தப்படும் வாகனங்களது வேகம் மற்றும் நிறையைக் கட்டுப்படுத்துவது பற்றிய துணை விதிகள்

அக்குறணை பிரதேச சபை

மிருகங்கள் அறுக்கும் கட்டளைச் சட்டம் - 2017

அக்குறணை பிரதேச சபை மூலம் 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 12 ஆம் திகதிய தீர்மான புத்தகத்தில் தீர்மான இலக்கம் 142/2016 இன்படி கீழ்க்காணப்படும் தீர்மானத்தினை ஏற்றுக்கொண்டதாக பொது மக்களுக்கு அறியத்தரப்படுகின்றது.

இங்கு அட்டவணையில் குறிப்பிடப்படுகின்றவர்கள் மூலம் அவர்களின் பெயருக்கு முன்னால் காட்டப்பட்டுள்ள மாட்டிறைச்சி வியாபாரத் தளமொன்றினை நடாத்திச் செல்வதற்கு மிருகங்கள் அறுக்கும் கட்டளைச் சட்டத்தின் 7(1) ஆம் பிரிவிற்கமைய அனுமதிப்பத்திரமொன்று வழங்குமாறு அக்குறணை பிரதேச சபையின் தகுந்த அதிகாரம் பெற்ற என்னிடம் விண்ணப்பித்துள்ளனர்.

கீழ்க் குறிப்பிடப்படுகின்ற இடங்களின் மாட்டிறைச்சி வியாபாரத் தளமொன்றினை நடாத்திச் செல்வதற்காக அனுமதிப்பத்திரமொன்று வழங்குவது சம்பந்தமாக எதிர்ப்புக்கள் தெரிவிப்பதாயின் இந்த வர்த்தமானப் பத்திரிகை பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து நான்கு கிழமைகளுக்குள் இந்த எதிர்ப்பிற்கான காரணத்தைக் குறிப்பிட்டு எழுத்து மூலம் இரு பிரதிகள் பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரடியாக சமர்ப்பிக்குமாறு அக்குறணை பிரதேச சபை அதிகாரப் பிரிவிற்குற்பட்ட வதிவாளர்களுக்கு இத்தால் அறியத்தரப்படுகின்றது.

டி.எஸ்.ராஜபக்ஷ,
செயலாளர் ,
அக்குறணை பிரதேச சபை,
அலவத்துகொட.

அக்குறணை பிரதேச சபை அலுவலகம்,
அலவத்துகொட.
2016,நவெம்பர் 30.

அட்டவணை

இலக்கம்	விண்ணப்பதாரியின் பெயர்	மாட்டிறைச்சி வியாபாரத்தளமாக நடைமுறைப்படுத்துவதற்கு எண்ணியுள்ள இடம்
1.	திரு. எம். நிப்ராஸ்	இல. 276, குருந்துகஹ எல, மாத்தளை வீதி, அக்குறணை
2.	திருமதி ஹனீபா சரீனா பேகம்	இல. 203, மாத்தளை வீதி, 7 ஆம் கட்டை, அக்குறணை
3.	திரு. எஸ். எம். சியாம் மொஹமட்	இல. 17/ஏ, துனுவில வீதி, அக்குறணை
4.	திரு. என். எஸ். எல். எம். மொஹிதீன்	இல. 265, மாத்தளை வீதி, அக்குறணை
5.	திரு. ஏ. எச். டி. எம். அஸ்கர்	இல. 372, ரம்புக்கேஎல, விலானகம
6.	திரு. டபிள்யூ. எச். எம். எம். சத்தார்	இல. 469/3, கசாவத்த, பட்டுகொட
7.	திரு. எம். ஐ. எம். ரிஸ்வான்	இல. 104/சி/3, தெலும்புகஹவத்த, அக்குறணை
8.	திரு. எம். எம். ரிஸ்வான்	இல. 247, குருந்துகஹ எல, அக்குறணை
9.	திரு. எம். எஸ். ரம்சான் மொஹமட்	இல. 274, குருந்துகஹ எல, மாத்தளை வீதி, அக்குறணை
10.	திரு. எஸ். எச். பி. சமான்	இல. 462, மாத்தளை வீதி, அக்குறணை
11.	திரு. எஸ். எம். இஸ்வி	இல. 242, மாத்தளை வீதி, அக்குறணை
12.	திரு. மொஹமட் பாஸீ/திரு. மொஹமட் பாஸீன்	இல. 145/ஜி, மாத்தளை வீதி, அக்குறணை
13.	திரு. எம். ஏ. எம். அனாஸ்	இல. 462/1, நீரெல்ல சந்தி, மாத்தளை வீதி, அக்குறணை
14.	திரு. எம். வை. எம். அஸ்வர்	இல. 193/2, புலுகஹதென்ன, அக்குறணை
15.	திரு. ஏ. ஏ. எம். பாரீஸ்	இல. 216/ஈ, 7ஆம் கட்டை, மாத்தளை வீதி, அக்குறணை
16.	திரு. ஏ. எச். எம். நிசார்	இல. 32/1, துனுவில வீதி, அக்குறணை
17.	திரு. கே. எம். ஜீ. சருக்	இல. 84/4/டீ, பல்லேவெலிகிட்டிய, அக்குறணை
18.	திரு. எஸ். எம். எஸ். மொஹமட்	இல. 150, மாத்தளை வீதி, அக்குறணை
19.	திரு. ஏ. ஏ. எம். சரூக்	இல. 191, புலுகஹதென்ன, அக்குறணை
20.	திரு. ஏ. எம். இர்பான்	இல. 50, துனுவில வீதி, அக்குறணை

புளத்கொஹுபிட்டிய பிரதேச சபை

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேசசபை சட்டத்தின் 24 ஆம் இலக்க பிரிவின் கீழ் சப்பிரகமுவ மாகாணத்தின் கேகாலை மாவட்ட புளத்கொஹுபிட்டிய பிரதேச சபையால் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் காட்டப்படும் பாதைகள் பிரதேச சபைக்கு சொந்தமான பாதைகளென இத்தால் அறியத்தரப்படுகிறது.

தற்போது பிரதேச சபையால் அளவிடப்பட்டு அடையாளமிடப்பட்டுள்ள இப் பாதைகள் தொடர்பாக உரிமையாளர் என்று உரிமைகோரும் யாராயினும் முறைப்பாடுகள் செய்வாராயின் இவ்வறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு ஒரு மாதகாலத்திற்கு முன்னர் தமது உரிமையை உறுதிப்படுத்துவதற்கு 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தன் 24(2) ஆம் பிரிவின் கீழ் செயற்படுத்துமாறு இத்தால் அறியப்படுத்துகிறது.

எம். பி. செனெஹலதா,
செயலாளர் ,
புளத்கொஹுபிடிய பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
புளத்கொஹுபிடிய,
2016, நவெம்பர் 11.

அட்டவணை

1. கிராம அலுவலர் பிரிவு - 60 கபகமுவ
2. பாதையின் பெயர் - கிரஹேன வத்த ஊடாக ஹரகாயடிதேரிய வீதி
3. பாதையின் நீளம் - 512 மீற்றர்
4. பாதையின் அகலம் - 2.45 மீற்றர்
5. பாதையின் ஆரம்ப இடம் - கேகாலை புலத்கொஹுபிடிய வீதியின் திருமதி நீலமனியின் வீட்டின் அருகில் (கீழ் சபரகமுவ)
6. பாதை முடிவடையும் இடம்- வீ.ஆர். குலசேகர என்பவரின் காணி
7. காணியின் பெயர் - கபகமுவ

இடம்	வலம்
1. ஏ.ஆர்.எஸ்.கே. பண்டார	1. கே. எம். செனவிரத்ன பண்டார
2. எ.எம். புங்சி பண்டார	2. கே. எம். என். நிரஞ்சலா குமாரி
3. வீ. ஆர். குணசேகர	3. பி.ஆர். அபேரத்ன
4. ஏ. ஆர். சாலிய குமார	4. கே. எம். சேபாலி மங்கலிகா
5. ஏ. ஆர். சாலிய குமார	5. கே. எம். சமன்த குமார செனெவிரத்ன

12- 953

கொத்மலை பிரதேச சபை

மாடறுப்பவர்கள் மற்றும் மாடறுப்பு நிலையங்கள் தொடர்பான சட்டத்தை திருத்தியமைத்தல் பொதுவான இடங்களில் நிறுவ ஏற்பாடுகள் செய்வதற்காக விதிக்கப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 7-2 (பிரிவின் கீழ் செய்யப்படும் அறிவித்தலாகும்)

கொத்மலை பிரதேச சபை நிர்வாக எல்லைக்குட்பட்ட இல. 115, நுவரெலியா பாதை, கடுகிதுல- ஹபுகஸ்தலாவ என்ற முகவரியில் வசிக்கும் மொகமட் நிசாம் அவர்கள் இல. 115, நுவரெலியா பாதை , கடுகிதுல என்ற முகவரியில் மாட்டிறைச்சி வியாபாரமொன்றையும் மாடறுப்பு நிலையமொன்றையும் நடாத்தி செல்வதற்காக 2017 ஆம் ஆண்டு அனுமதிப் பத்திரம் ஒன்றை வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

அந்த இடத்தில் மாடறுப்பு நிலையமொன்றையும் மாட்டிறைச்சி வியாபாரமொன்றையும் நடாத்திச் செல்லல் இடமளிப்பது தொடர்பில் எதிர்ப்பு ஏதும் இருப்பின் அந்த எதிர்ப்பு தொடர்பாக கருத்து வெளியிட விருப்பமான கொத்மலை பிரதேச சபையின் அதிகார பிரதேசத்திற்குள் வசிக்கும் நபர்கள் அவர்களின் எதிர்ப்பை எழுத்து மூலமாக இரண்டு பிரதிகளைக் கொண்டதாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு 2016.12.30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

செயலாளர் ,
கொத்மலை பிரதேச சபை,
பூண்டுலோயா.

2016, திசெம்பர் 05.

12-966

ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை

வரவுசெலவு நிகழ்ச்சி நிரல்- 2017

மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (252 ஆத்தியாயம்) 212(ஆ) பிரிவின் படி அறியத்தருவது மாநகர சபையின் 2017 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு ஏடு பொது மக்களின் பார்வைக்காக அலுவலக நேரத்தில் 2016 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 23 ஆம் திகதி தொடக்கம் மாநகர சபை அலுவலகத்தில் வைக்கப்படும்.

எஸ்.பி. லியனகே,
மாநகர ஆணையாளர்,
ஸ்ரீ ஜயவர்தனபுரகோட்டே மாநகர சபை.

ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை அலுவலகம்,
ராஜகிரிய,
2016, மார்கழி 23.

12- 1008

ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை

2016 ஆம் ஆண்டிற்கான (1ஆம்) இலக்க பிற்சேர்க்கப்பட்ட வரவுசெலவு திட்ட நிகழ்ச்சி நிரல் மாநகர சபை கட்டளைச் சட்டம் (252 ஆம் அத்தியாயம்) 214(2) (ஆ) பிரிவின் படியான அறிவித்தல்

241(2)(ஆ) பிரிவின் படி அறியத்தருவது மாநகர சபையின் 2016 ஆம் ஆண்டிற்கான (1ஆம்) இலக்க பிற்சேர்க்கப்பட்ட வரவு செலவுத் திட்ட ஏடு பொது மக்களின் பார்வைக்காக அலுவலக நேரத்தில் 2016 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 23 ஆந் திகதி தொடக்கம் மாநகர சபை அலுவலகத்தில் வைக்கப்படும்

எஸ்.பி. லியனகே,
மாநகர ஆணையாளர்,
ஸ்ரீ ஜயவர்தனபுரகோட்டே மாநகர சபை.

ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை அலுவலகம்,
ராஜகிரிய,
2016, மார்கழி 23.

12- 1009

வலிகாமம் தெற்கு பிரதேச சபை

வலிகாமம்தெற்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட அசைவற்ற ஆதனங்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டு மக்களின் ஆட்சேபனை பெறும் பொருட்டு செய்யப்படும் வர்த்தமானி அறிவித்தல்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 141முதல் 146 வரையான பிரிவுகளுக்கு அமைவாக வலிகாமம் தெற்கு பிரதேச சபை எல்லையினுள் அமைந்துள்ள அசைவற்ற ஆதனங்கள் உப அலுவலகங்கள் ரீதியாக (சுன்னாகம், உடுவில்) மீள்மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன.

மேற்படி மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பட்டியல்களை வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்திலும் அசைவற்ற ஆதனங்கள் அமைந்துள்ள இடப்பரப்புக்கான உப லுவலகங்களிலும் குறித்த ஆதனங்களின் சொந்தக்காரர்/வாடகைக்குடியிருப்பாளர் பரிசோதிக்கலாம்.

மீள் மதிப்பீடு செய்யப்பட்ட இவ் அசவைற்ற ஆதனங்களின் சொந்தக்காராராயினும் சரி வாடகைக் குடியிருப்பாளராயினும் சரி குறித்த மதிப்பீடுகளுக்கு எதிரான எழுத்திலான ஆட்சேபனைகளை உரிய ஆவணங்களுடன் இந்த அறிவித்தல் செய்யப்பட்ட திகதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் செயலாளருக்கு சமர்ப்பிக்கலாம் என இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகின்றது.

திரு.திருநாவுக்கரசு சுதர்சன்,
செயலாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.

வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
2016, நவெம்பர் 15.

12- 1023

பேருவளை நகர சபை

1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி அலுவலக அங்கீகரிக்கப்பட்ட இடைக்காலச் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் செய்யப்படும் அறிவித்தல்.

(255 ஆவது அத்தியாயமாகிய) நகரசபைக் கட்டளைச் சட்டத்தின் 184 'அ' பிரிவின் கீழ் எமக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி அலுவலக அங்கீகரிக்கப்பட்ட இடைக்காலச் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் இரண்டாம் திகதி 1531 ஆம் இலக்கத்தின் கீழ், கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு முடிவு எடுக்க வேண்டியுள்ளதாக இத்தால் அறியத்தருகின்றேன்.

தீர்மானம்

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாணசபை (ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி அலுவலகம் (அங்கீகரிக்கப்பட்ட இடைக்காலச் சட்டம்) சட்டத்தின் 2 ஆவது பிரிவின் கீழ் மேல் மாகாணத்தின் முதலமைச்சர் மற்றும் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சரினால் தயாரிக்கப்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இல. 1888/46 உம் 2014, நவெம்பர் மாதம் 14 ஆம் திகதியுடைய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட நகர சபை வரவு இடைக்காலச்சட்டம் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாணசபை அணுசங்கித ஏற்பாடுகள் சட்டத்தின் 2 ஆவது பிரிவில் மென்மேலும் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின்படி மேல் மகாணத்தில் மகாணசபையினால் அனுமதிக்கப்பட்டு அவ்வாறு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இல. 1947/7 மற்றும் 2015, திசெம்பர் 28 ஆந் திகதி வர்த்தமானி அறிவித்தலின் கீழ் அறிவிக்கப்படுகின்றது.

1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி அலுவலக (அங்கீகரிக்கப்பட்ட இடைக்காலச் சட்டம்) சட்டத்தில் 3 ஆவது பிரிவில் மேலும் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் படி முச்சக்கரவண்டிகள் தரித்துவைத்தல் பற்றிய இடைக்காலச் சட்டம்(உப சட்டம்) தவிர்ந்த அதன் அங்கீகரிக்கப்பட்ட இடைக்காலச் சட்டம் பேருவளை நகர சபை அதிகாரப் பிரதேசத்துக்காக 2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி முதல் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக (255 ஆம் அத்தியாயமாகிய) நகரசபை கட்டளைச் சட்டத்தின் 184 'அ' பிரிவின் கீழ் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மற்றும் இம்முடிவு எடுக்கப்பட்ட இத் திகதியாகும் போது பேருவளை நகர சபை அதிகாரப் பிரதேசத்துக்காக 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி அலுவலக அங்கீகரிக்கப்பட்ட இடைக்காலச் சட்டத்தின் 3ஆவது பிரிவின் கீழ் ஏற்றுக்கொள்வதுடன் அதிகாரமுடைய கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பெயர்களின் கீழ் விபரிக்கப்படும் அங்கீகரிக்கப்பட்ட இடைக்காலச் சட்டம் (உப சட்டம்) அவ் அங்கீகரிக்கப்பட்ட இடைக்காலச் சட்டத்தின் கீழ் அதுவரை மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளுக்கு இடையூறுகள் ஏற்படாதவாறு 2016, திசெம்பர் மாதம் 31 ஆம் திகதியின் பின்னர் பேருவளை நகர சபை அதிகாரப் பிரதேசத்துக்கு சம்பந்தப்பட்டவாறு (255 ஆவது அத்தியாயமாகிய) நகர சபை கட்டளைச் சட்டத்தின் 184 'அ' பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் முடிவெடுத்துள்ளேன்.

1. *வெதுப்பகம் பற்றிய உப சட்டம்*
2. *உணவகம் பற்றிய உப சட்டம்*
3. *விடுதிகள் பற்றிய உப சட்டம்*
4. *அருவருக்கத்தக்கதும் அபாயகரமானதுமான கைத்தொழில் பற்றிய உப சட்டம்*
5. *மீன் விற்பனை பற்றிய உப சட்டம்*
6. *இறைச்சி விற்பனை பற்றிய உப சட்டம்*

பீ. டீ. ஏ. கே. கயன்தி,
செயலாளர் மற்றும் நிறைவேற்று அதிகாரமுடைய அதிகாரி ,
பேருவளை நகர சபை.

நகர சபை அலுவலகம்,
2016, திசெம்பர் 5.

12- 1064

1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவன ஏற்றுக்கொள்ளப்பட்ட இடைக்கால யாப்புகள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைச் சட்டத்தின் 9.3 ஆம் உப பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனம் ஏற்றுக்கொள்ளப்பட்ட இடைக்கால யாப்பின் 3 ஆம் பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய 2016, ஒகத்து மாதம் 31 ஆந் திகதியுடைய 250 ஆம் இலக்கத்தின் கீழ் பின்வரும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக இதன் மூலம் அறியத்தருகின்றேன்.

தீர்மானம்

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை(தொடர்பான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்கமுடைய உள்ளூராட்சி நிறுவன (ஏற்றுக்கோள்ளப்பட்ட இடைக்கால யாப்பு) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் மேல் மாகாணத்தின் உள்ளூராட்சி விடயப் பொறுப்பான அமைச்சரால் தயாரிக்கப்பட்டு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1888/47 ஆம் இலக்க மற்றும் 2014.11.14 ஆம் திகதியுடைய அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட சட்ட வரை பின் இடைக்கால சட்டம், 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகளுடன் தொடர்பான ஏற்பாடுகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் மேலும் குறித்துறைக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய மேல் மாகாண சபையினால் அங்கீகரிக்கப்பட்டு அது பற்றி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1947/6 ஆம் இலக்க மற்றும் 2015.12.28 ஆந் திகதியுடைய வர்த்தமானி அறிவித்தலில் மூலம் அறிவிக்கப்படுகின்றது.

மேலும் 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்கள் (ஏற்றுக்கொள்ளப்பட்ட இடைக்கால யாப்புகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மேலும் குறித்துரைக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய குறிப்பிட்ட ஏற்றுக்கொள்ளப்பட்ட இடைக்கால யாப்பில் சுடலை கம்பஹா பிரதேச அதிகார எல்லை தொடர்பில் 2016.12.31 ஆம் திகதி முதல் ஏற்புடையதாக இருக்க வேண்டுமென 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிராந்திய சபைக் கட்டளைச் சட்டத்தின் 9 (3) பிரிவின் கீழ் தீர்மானிக்கின்றேன்.

மேலும் இத் தீர்மானம் மேற்கொள்ளப்படும் இந்நாள் ஆகும் போது கம்பஹா பிரதேச சபை அதிகார எல்லை தொடர்பில் 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட இடைக்கால யாப்பின் 3 ஆம் பிரிவின் கீழ், ஏற்புடையதாக வலுப்படுத்தப்படும். பின்வரும் அட்டவணையிடப்பட்ட பெயர்களின் கீழ் விபரிக்கப்படும் ஏற்றுக்கொள்ளப்பட்ட இடைக்கால யாப்புகள் அந்த ஏற்றுக்கொள்ளப்பட்ட இடைக்கால யாப்பின் கீழ் அதுவரை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் 2016.12.31 ஆம் திகதிக்குப் பின் திவுலப்பிட்டிய பிரதேச சபை அதிகார எல்லை தொடர்பில் ஏற்புடையது ஆகாது எனவும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆ இலக்க பிரதேச சபை சட்டடத்தின் 9 (3) பிரிவின் கீழான ஏற்பாடுகளுக்கு அமைய தீர்மானிக்கின்றேன்.

அட்டவணை

1. பேக்கரிகள்
2. விரும்பத்தகாத மற்றும் அபாயகரமான வர்த்தகங்கள்
3. ஹோட்டல்கள்
4. விடுதி இல்லங்கள்
5. மீன் விற்பனை
6. நடமாடும் வியாபாரிகள்
7. விளம்பர அறிவித்தல்கள்
8. பொது மைதானங்கள் பாவித்தல்
9. இறைச்சி விற்பனை
10. சோற்றுக் கடைகள்

பீ. பிறேமா செனெவிரத்ன,
செயலாளர் மற்றும் சபையின் அதிகாரங்களையும்
பொறுப்புக்களையும் நிறைவேற்றும் அதிகாரி,
கம்பஹா பிரதேச சபை.

ஹெனரத்கொட பிரதான அலுவலகம்,
கம்பஹா பிரதேச சபை,
2016, ஒகத்து 31.

12- 1086

நானாவித அறிவித்தல்கள்

அம்பலன்தொட்ட பிரதேச சபை

வரி அறவிடுதல் - 2017

1987 ஆம் அண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 09 (03) ஆம் உப பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் அம்பலன்தொட்ட பிரதேச சபையினால் 2017 ஆம் வருடத்திற்காக வரி அறவிடப்பட 2016.09.27 ஆம் திகதி நடத்தப்பட்ட நிதி மற்றும் கொள்கை அமுலாக்கல் சபையின் இலக்கம் 2 (11) இன்படி கிடைக்கப் பெற்ற சிபார்சின்படி 2016.09.29 ஆம் திகதிய தீர்மான இலக்கம் 114 இன் கீழ் கீழே வரிகளை விதித்து அறவிடப்படவென என்னால் தீர்மானித்து அறிவித்தல் விடுகின்றேன்.

பெரமுன ஆரச்சிகே ஆரியரத்ன,
செயலாளர்,
அம்பலன்தொட்ட பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
அம்பலன்தொட்ட,
2016, செத்தெம்பர் 30.

12-1028/1

அம்பலன்தொட்ட பிரதேச சபை

வரிமதிப்பு அறவிடல் - 2017

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின்

(அ) 146 ஆம் பிரிவின் (1) உட்பிரிவின் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி அம்பலந்தொட்ட பிரதேச சபை வலுப் பிரதேசத்தில் அமைந்துள்ளதும், அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசங்களாக பிரகடனப்படுத்தப்பட்ட பிரதேசங்களில் அமைந்துள்ள சொத்துக்கள் அசையா சொத்துக்கள் போன்றவற்றின் 2016 ஆம் வருட மதிப்பீட்டினை 2017 ஆம் வருட மதிப்பீடாக கருதி ஏற்றுக்கொள்வதற்கும்.

(ஆ) 134 (1) ஆம் பிரிவினால் வழங்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் அம்பலந்தொட்ட பிரதேச சபை அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் அமைந்துள்ளதும், அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசங்களாக பிரகடனப்படுத்தப்பட்ட பிரதேசங்களில் அமைந்துள்ள சொத்துக்கள் அசையா சொத்துக்கள் போன்றவற்றின் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியில் நூற்றுக்கு 9% த்தை 2017 ஆம் வருடத்திற்கான வரியாக விதித்து அறவிடப்படவெனவும்.

(இ) 134 ஆம் பிரிவின் (6) ஆம் இலக்க உப பிரிவின்படி வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி குறித்த வருடாந்த வரியை 2017 ஆம் ஆண்டில் ஒழுங்கு முறைப்படி மார்ச்சு மாதம் 31, யூன் மாதம் 30, செத்தெம்பர் 30, திசெம்பர் 31 ஆகிய திகதிகளிலோ அல்லது அதற்கு முன்னரோ தவணைப் முறைப்படி நான்கு தடவைக்கு அறவிடப்பட அம்பலன்தொட்ட பிரதேச சபை தீர்மானித்துள்ளதாகவும்.

(ஈ) (i) 134 ஆம் பிரிவின் (7) ஆம் இலக்க உப பிரிவின்படி வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி வருடத்திற்கான வரித் தொகையை வருடத்தின் சனவரி 31 ஆம் திகதிக்கு முன் முழுத் தொகையை செலுத்தும் நுகர்வோர்களுக்கு 10% கழிவினையும் தவணைமுறைப்படி தவணையின் ஆரம்பத்தில் செலுத்துவதாயின் 5% கழிவினையும் பெற உரித்துடையவராவர்.

மேலே ஈ பிரிவின் i , ii ஆம் பிரிவுகளின் படி செலுத்தப்படவேண்டிய வரித் தொகையை செலுத்தத் தவருவதாயின் 10% தண்டப்பணத்தை 2017 ஆம் வருடத்தில் விதித்து அறவிடப்பட தீர்மானித்துள்ளதாக இதன் மூலம் அறியத்தருகின்றேன்.

பெரமுன ஆரச்சிகே ஆரியரத்ன,
செயலாளர்,
அம்பலன்தொட்ட பிரதேச சபை.

12-1028/2

அம்பலன்தொட்ட பிரதேச சபை

விளம்பரங்களுக்கான அறிவித்தல்களில் கட்புலனாகும் சூழல் தொடர்பான துணை விதியின் கீழ் கட்டணம் அறவிடல் - 2017

1991.08.23 ஆம் திகதிய இலக்கம் 677 இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் IV (அ) பிரிவில் விளம்பரப்படுத்தப்பட்டதும் 1991.07.22 ஆம் திகதிய அறிவித்தலின் படி இச்சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதும் 1988.08.23 ஆம் திகதிய 520/7 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் உள்ளூராட்சி வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை கௌரவ அமைச்சர் அவர்களினால் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டதும் உள்ளூராட்சி நிறுவனங்களின் இடையாப்புக்களின் இலக்கம் 39 ஆம் பிரிவின் பிரகாரம் விளம்பரங்களுக்கான அறிவித்தலில் துணை விதியின் கீழ் பிரதேச சபையின் வலுப் பிரதேசத்திற்குள் ஏதாவது வீதிக்கு, பாதைக்கு, ஓடைக்கு, நதிக்கு, கடலுக்கு மற்றும் ஆகாயத்திற்கு தென்படும் விதத்தில் அறிவித்தல்கள் விளம்பரப்படுத்தப்பட்டால் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 122 (1)ஆம் பிரிவின்படி தயாரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கு அமைய வருடத்திற்காக அறவிடப்படும் கட்டணங்களின் தொகையை 2017 ஆம் வருடத்திற்காக அறவிடப்பட தீர்மானித்துள்ளேன்.

பெரமுன ஆரச்சிகே ஆரியரத்ன,
செயலாளர்,
அம்பலன்தொட்ட பிரதேச சபை.

அட்டவணை

		சதுர அடி ஒன்றுக்கு ரூபா ச.
(அ)	நிரந்தர அறிவித்தல் தொடர்பாக லீப் வருடத்திற்கு ஒரு சதுர அடிக்கு	100 0
(ஆ)	நிரந்தர பெனர் மூன்று மாதத்திற்கு ஒரு சதுர அடிக்கு	20 0
(இ)	தற்காலிக பெனர் கடவுட் மூன்று மாத காலத்திற்கு ஒரு சதுர அடிக்கு	20 0
(ஈ)	தற்காலிக பெனர் கடவுட் லீப் ஒரு மாதத்திற்கு குறைந்த காலத்திற்கு ஒரு சதுர அடிக்கு	20 0
(உ)	கட்டிட சுவர்களின் வரயும் விளம்பரங்களுக்கு ஒரு சதுர அடிக்கு	35 0
(ஊ)	ஏதாவது வியாபாரத்தின் பெயரை விளம்பரப்படுத்தும் நோக்கில் விளம்பரப்படுத்தும் ஒரு சதுர அடிக்கு மேற்பட்டதும் ஆகாயத்தில் விளம்பரப்படுத்தும் மின் குமிழிகளினால்	200 0

12-1028/3

அம்பலன்தொட்ட பிரதேச சபை

வருடாந்த உத்தரவுப் பத்திர கட்டணம் - 2017

1987 ஆம் வருட 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 149 ஆம் பிரிவுகளின்படி வாசிக்கப்பட்டதும் அப்பிரிவின் 147 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவில் (ஆ) அத்தியாயத்தின் படி வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் அம்பலன்தொட்ட பிரதேச சபையின் வலுப்பிரதேசத்தில் அமைந்துள்ளதும் அட்டவணையில் I ஆம் நிரலில் அமைந்துள்ள ஏதாவது வியாபாரமானது 2017 ஆம் வருடத்தில் நடத்துவதற்காக வழங்கப்படும் உத்தரவுப்பத்திரமானது அவ் வியாபார நிலையங்கள் அமைந்துள்ள சூழல் மற்றும் நிலையத்தின் வருடாந்த பெறுமதியாக அட்டவணையின் நிரல் II இன் கீழ் குறித்த தொகையை உத்தரவுப்பத்திர கட்டணமாக 2017 ஆம் வருடத்திற்கென விதித்து அறவிடப்படவென தீர்மானிக்கப்பட்டதாக இதன் மூலம் அறிவித்தல் விடுக்கின்றேன்.

மேற்குறித்த உத்தரவுப்பத்திர கட்டணம் 2017, மாச்சு 31 ஆம் திகதிக்கு முன் செலுத்தப்பட வேண்டுமென மீண்டும் அறியத்தருகின்றேன்.

இதனைத் தவிர அரசினால் விதிக்கப்பட்டுள்ள முத்திரை வரியாகிய நூற்றுக்கு 10% தொகையை அட்டவணையின் நிரல் II இல் குறித்த உத்தரவுப் பத்திரக் கட்டணத்திற்கு மேலதிகமாக செலுத்தப்பட வேண்டுமென கருத்துத் தெரிவித்துள்ளது.

பெரமுன ஆரச்சிகே ஆரியரத்ன,
செயலாளர்,
அம்பலன்தொட்ட பிரதேச சபை.

அட்டவணை

தொடர் இலக்கம்	நிரல் I கைத்தொழில்	நிரல் II வருடத்தின் வருடாந்த பெறுமதி		
		750 ரூபாவுக்கும் குறைந்த ரூபா ச.	750 ரூபாவில் இருந்து 1,500 ரூபா வரை ரூபா ச.	1,500 ரூபாவுக்கு மேற்பட்ட ரூபா ச.
1.	சாப்பாட்டுக் கடை	500 0	750 0	1,000 0
2.	பேக்கரி	500 0	750 0	1,000 0
3.	ஹோட்டல்	500 0	750 0	1,000 0
4.	தே/கோப்பி கடை	500 0	750 0	1,000 0
5.	பழங்கள் வியாபாரம்	500 0	750 0	1,000 0
6.	மரக்கரி வியாபாரம்	500 0	750 0	1,000 0
7.	பால் பட்டி நடத்தல்	500 0	750 0	1,000 0
8.	முடிவெட்டும் நிலையம்	500 0	750 0	1,000 0
9.	லொன்டரி	500 0	750 0	1,000 0
10.	மீன் வியாபாரம்	500 0	750 0	1,000 0
11.	தங்குமிட வசதி நிலையம்	500 0	750 0	1,000 0
12.	இறைச்சி வியாபாரம்	500 0	750 0	1,000 0
13.	ஐஸ் கிரீம் உற்பத்தி	500 0	750 0	1,000 0
14.	சிற்றுண்டிச் சாலை	500 0	750 0	1,000 0
15.	உணவு வகைகள் மொத்தமாக விற்கப்படும் நிலையம்	500 0	750 0	1,000 0
16.	இனிப்புப் பண்டங்கள் மற்றும் பழ விற்பனை	500 0	750 0	1,000 0
17.	தயிர் விற்பனை	500 0	750 0	1,000 0
18.	நடமாடும் உணவு விற்பனை	500 0	750 0	1,000 0
19.	உராய்வு நீக்கிகள்	500 0	750 0	1,000 0
20.	எண்ணெய் ஆலை நடத்தல்	500 0	750 0	1,000 0
21.	நெல் ஆலை	500 0	750 0	1,000 0
22.	சரக்கு அலை	500 0	750 0	1,000 0
23.	உப்பு தயாரித்து பக்கட் பண்ணும் நிலையம்	500 0	750 0	1,000 0
24.	கொங்கிரீட் கைத்தொழில்	500 0	750 0	1,000 0
25.	ஓடு மற்றும் செங்கல் கைத்தொழில்	500 0	750 0	1,000 0
26.	மர ஆலை	500 0	750 0	1,000 0
27.	இயந்திரங்கள் மூலம் சீமெந்து கற்கள் தயாரிக்கும் நிலையம் நடத்தல்	500 0	750 0	1,000 0
28.	சுண்ணாம்பு சூளை	500 0	750 0	1,000 0
29.	பீங்கான் மட் பாண்டங்கள்	500 0	750 0	1,000 0
30.	சிப்பிகள் அரைக்கும் கைத்தொழில்	500 0	750 0	1,000 0
31.	குளிரூட்டிகள் குளிர் சாதன வாயு பழுதுபார்த்தல்	500 0	750 0	1,000 0
32.	மின்சார உபகரணங்கள் இலக்ரோனிக் உபகரணங்கள் பழுதுபார்த்தல்	500 0	750 0	1,000 0
33.	கராஜ்	500 0	750 0	1,000 0
34.	தச்சு ஆலை	500 0	750 0	1,000 0
35.	வாகன சர்விஸ் நிலையம்	500 0	750 0	1,000 0
36.	காஸ் விற்பணை மற்றும் களஞ்சியப்படுத்தல்	500 0	750 0	1,000 0
37.	சிகை அலங்கார மத்திய நிலையம் நடத்தல்	500 0	750 0	1,000 0
38.	காளான் வியாபாரம் நடத்தல்	500 0	750 0	1,000 0
39.	சவர்க்காரம் சவர்க்காரத் தூள் உற்பத்தி செய்தல் நிலையம் நடத்தல்	500 0	750 0	1,000 0

தொடர் இலக்கம்		நிரல் I	நிரல் II	
	கைத்தொழில்	வருடத்தின் வருடாந்த பெறுமதி		
		750 ரூபாவுக்கும் குறைந்த	750 ரூபாவில் இருந்து 1,500 ரூபா வரை	1,500 ரூபாவுக்கு மேற்பட்ட
		ரூபா ச.	ரூபா ச.	ரூபா ச.
40.	உத்தரவுப் பத்திரம் வழங்க தகுந்த வியாபாரம் நடத்தல்	500 0	750 0	1,000 0
41.	உராய்வு நீக்கிகள் நிரப்பும் நிலையம் நடத்தல்	500 0	750 0	1,000 0
42.	கல் விற்பனை நிலையம் கல் உடைக்கும் வியாபாரம் நடத்தல்	500 0	750 0	1,000 0
43.	மணல் கலஞ்சியப்படுத்தும் மற்றும் மண் கழுவி மணல் அகற்றும் வியாபாரம் நடத்தல்	500 0	750 0	1,000 0
44.	உடல் அலங்கார நிலையம்	500 0	750 0	1,000 0

